பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 14 வியாழக்கிழமை 31.10.2019 | கதிர் 360

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு தொடர்பான கூத்துத் தொடர்கின்றது.

நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தமிழ்க் கட்சிகள்எல்லாம்ஒருமித்தகருத்தை எட்ட வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணம் பக்கம் 02

## யுத்த வெற்றியைத் தனிநபர்கள் உரிமை கொண்டாட முடியாது!

### யாழ்ப்பாணத்தில் மகேஷ் அதிரடிக் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 31

நாட்டில் எல்லோரும் இணைந்து பெற்றுக் கொண்டதே யுத்த வெற்றி. ஆகையால் அந்த யுத்த வெற்றியைத் தனிநபர்கள் உரிமை கொண்டாட முடியாது. யுத்த வெற்றி என்பது தனி நபர் வெற்றியும் அல்ல.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனாதிபதிவேட்பாளருமான ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க.

அத்துடன் கடத்தல் காணாமலாக் கப்படுதல், தாக்குதல்கள் என்பன துரதிஷ்டம் என்றும், பக்கம் 03

## நல்லூரில் மகேஷ் சேனநாயக்க



யாழ்ப்பாணம், ஒக். 31

ஜனாதிபதி வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் மகேஷ் பக்கம் 03



# தமிழர்கள் யாரை ஆதரிப்பது? நேற்றும் முடிவு கிட்டவில்லை

### இன்று தபால் வாக்களிப்பில் தவறாது பங்கேற்க ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூட்டாக வலியுறுத்தல்


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 31

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவராத நிலையில் இன்று வியாழக்கிமை இடம்பெறவுள்ள தபால் மூல வாக்களிப்பில் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோர முடியாதுள்ளமையால் மக்கள் தமது வாக்குரியமையைத் தவறாது பிரயோகிக்கவேண்டுமென மட்டும் ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. பக்கம் 03

## சஜித் வென்றாலும் நானேதான் பிரதமர்

ரணில் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வென்றாலும் தாமே பிரதமர் பதவியில் தொடர்ந்தும் இருப்பாரெனப் பக்கம் 03

## ஊழல் செய்தவர்களுக்கு எனது அமைச்சரவையில் இடமில்லை

### ரணிலுக்கு சஜித் பிரேமதாஸ பதிலடி

கொழும்பு, ஒக். 31

நான் ஜனாதிபதியினால் எனது அமைச்சரவையில் ஊழல் மோசடி செய்தவர்களுக்கு இடமளிக்க பக்கம் 03

## முடிந்தால் நீக்குங்கள்

### வசந்த சேனநாயக்க சவால்!

கொழும்பு, ஒக். 31

இராஜாங்க அமைச்சுப் பதவியைத் தாம் தொடர்ந்தும் வகிக்கப் போகிறார் பக்கம் 03

## அரசியல்கைதிகளை விடுவிக்க கோட்டாவால் முடியுமெனில் ஏன் உங்களால் அது முடியாது?

### ஜனாதிபதி மைத்திரிக்கு விக்கி கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.31

எதிர்வரும் போயா தினத்துக்கு முன்னர் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பக்கம் 02

## தபால் வாக்களிப்பு இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 31

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப் பதிவு இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

அரச ஊழி பக்கம் 03

## பிரதமர் ரணிலின் கனவு ஒருபோதுமே பலிக்காது

### திடமாகக் கூறுகிறார் வீரவன்ஸ

கொழும்பு, ஒக். 31

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கனவு ஒருபோதும் பலிக்காது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் விமல் பக்கம் 03

## வடக்கு–கிழக்கு வாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வேன்

### வவுனியாவில் சஜித் அறிவிப்பு

வவுனியா, ஒக். 31

வடக்கு–கிழக்கு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, அவர்களும் சேர்ந்து நிம்மதியாக வாழக்கூடிய நாட்டைப்பெற்றுக்கொடுப்பேன் பக்கம் 03

## அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, ஒக். 31

உயர் கல்வி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்கம் 03

## தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டும்

### காணாமல்போனோரின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, ஒக். 31

ஜனாதிபதித் தேர்தலில்,தமிழ்வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு வவுனியாவில் தொடர்ச்சியாக 984ஆவது நாளாகவும் சுழற்சி முறை போராட்டத்தில்ஈடுபட்டுக்கொண்டிருக்கும் காணாமற்போன உறவு பக்கம் 03

# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி சத்தியாக்கிரகத்துக்குச் சிவாஜி திட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைச்சிறைகளில்தடுத்து வைக்கப்பட்டிருக்கும்தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன் ஆட்சிக் காலம்நிறைவடைவதற்குமுன்னர் விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தித் தாம் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவுள்ளார் என ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக இப்போது பெரிதும் எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுடைய விடுதலை தொடர்பாகப் பேசுகிறவர்கள் எவரும் ஆட்சியில் இருந்தபோது சிந்திக்கவில்லை.

குறிப்பாக கோட்டாபாய அரசியல் கைதிகளை விடுதலை செய்வார்எனக் கூறுகிறார். அவருடைய ஆட்சிக் காலத்தில், அவருடைய அண்ணனின் ஆட்சிக்காலத்தில் என்ன செய்தார்கள்? இப்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன் எனத் தேர்தலுக்காகப் பேசிக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் கூட அரசியல் கைதிகள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

இதனால் எதிர்வரும் 6ஆம் திகதி காலை ஜனாதிபதி செயலகத்தின் முன்னாலும், நண்பகல் அலரிமாளிகை முன்னாலும் தேர்தல் விதிகளுக்கு உட்பட்டுச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றேன்.

ஜனாதிபதி தன்னுடைய ஆட்சிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். உண்மையில் அவரை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றாமல், அவருக்கு செய் நன்றி இருக்குமாயின் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அதேபோல் பிரதமரும் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும்தீர்மானத்தை உடனடியாக அறிவிக்கவேண்டும் – என்றார். (ஐ-07)

# மன்னார் ஆயருடன் நேற்று கனேடியத் தூதுவர் சந்திப்பு



மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினனுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலுக்குப் பின் மன்னார் மாவட்டத்தில் சமய, இன ஒற்றுமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்தும், மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மன்னார் மறை மாவட்ட ஆயரிடம் கேட்டறிந்து கொண்டார். இந்தச் சந்திப்பில் மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளாரும் கலந்து கொண்டார். (ஐ)

# 80 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் சுண்டிக்குளத்தில் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 31

சுண்டிக்குளம் பகுதியில் சுமார் 80 கிலோ எடையுடைய கஞ்சா போதைப்பொருளுடன் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்ட படகு ஒன்றும் அதற்கான இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சுண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 80 கிலோ கிராம் எடையுடைய 40 கஞ்சாப் பொதிகள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அவர் இன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளின் கூட்டு அமைப்பு ஒரு முயற்சி எடுத்தது.

ஆறு தமிழ்க் கட்சிகளை அழைத்தது. அதில் ஒரு கட்சி ஏற்கனவே இந்தத் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற ஒரு முடிவை எடுத்து அறிவித்த கட்சி. பிறகு எப்படி புதிய தீர்மானம் எடுக்கும் முயற்சியில் அதுவும் சேர்ந்து ஈடுபடலாம் என அப்போது கேள்வி எழுப்பப்பட்டது.

*"இல்லை. இல்லை. நாங்களும் பங்குபற்றப் போகின்றோம்"* என்று கூறிக்கொண்டு ஆறு கட்சி சந்திப்பாக மூன்று நாள் கலந்துரையாடலில் அதுவும் பங்குபற்றியது.

ஏலம் கூறும் இடத்தில் சில பிரகிருதிகள் பிரசன்னமாகியிருந்து, மாறி மாறி ஏலத் தொகையைக் கேட்டு அதனை உயர்த்தி விடுவது போல, இந்தக் கட்சியும் அந்த ஆறு கட்சிக் கூட்டத்துக்குப் பிரசன்னமாகியிருந்து, தமிழர் தரப்பின் கோரிக்கைப் பட்டியலை உச்சத்துக்குக் கொண்டு போய் விட்டு விட்டு – தன் கைவரிசையைக் காட்டி விட்டு, மெல்ல வெளியேறிவிட்டது. – தனது 'ஒரிஜினல்' நிலைப்பாட்டின்படி பகிஷ்கரிப்புக் கோரிக்கையோடு.

சரி. அதுதான் வெளியேறியது, வெளியேறட்டும் என்று விட்டு விட்டு, எஞ்சிய ஐந்து கட்சிகளாவது ஒன்று சேர்ந்து விடயத்தை நகர்த்தலாம் – விடயம் நகரும் – என்று பார்த்தால், அதிலும் ஒரு கட்சிக்குத் திடீரென 'வலிப்பு' வந்து விட்டது போலும்.

ஐந்து தமிழ்க் கட்சிகளும் நேற்றுத்தான் கூடி என்ன தீர்மானம் எடுப்பது என்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்ய இருந்தன.

ஆனால் நீதியரசரின் கட்சி மட்டும் முந்திக் கொண்டு தன்பாட்டில் ஒரு முடிவை நேற்று முன்தினமே எடுத்து அறிவித்துவிட்டது.

சரி. அறிவித்ததும் தப்பில்லை. அப்படி ஒரு முடிவை எடுத்து, தமிழர்களை வழிப்படுத்தும் ஒரு தீர்மானத்தை அறிவித்து விட்டு, நேற்று மாலை ஏனைய கட்சிகள் என்ன தீர்மானம் எடுப்பது என்று ஆராயும் கூட்டத்துக்கும் இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் வந்தனர்.

பலருக்கும் விடயம் விளங்கவில்லை.

சைக்கிள் கட்சி என்னவென்றால் தான் ஒரு பகிஷ்கரிப்பு முடிவை எடுத்து அறிவித்து விட்டு, ஏனைய கட்சிகள் முடிவு செய்யும் கூட்டத்துக்குள் தலையை நீட்டி அதிலும் குசும்பு பண்ணுகின்றது.

அதேமாதிரி, நீதியரசரின் கட்சியும் ஒரு முடிவை எடுத்து விட்டு, ஏனைய கட்சிகள் கூடி புதிய முடிவை எடுக்கவிருக்கும் கூட்டத்துக்குள் தலையை நீட்டுகின்றது.

விடயம் விளங்காத மாற்றுக் கட்சியின் பிரதிநிதிகள் இது பற்றி நீதியரசரின் கட்சியின் பிரதிநிதிகளிடமே நேரடியாகக் கேட்டும் விட்டனர்.

*"நீங்கள்தானே உங்கள் கட்சி தானே இந்தத் தேர்தல் தொடர்பில் ஒரு முடிவை எடுத்து மக்களை வழிப்படுத்தியும் விட்டீர்கள். அறிவிப்பு மூலம் வெளிப்படுத்தியும் விட்டீர்கள். பிறகு ஏன் புதிதாக நாம் முடிவு எடுக்க வேண்டிய கூட்டத்துக்குள் வந்து தலையை நீட்டுகிறீர்கள்! இது தேவையற்றதுதானே…!"* – என்று அவர்கள் கேட்டார்கள்.

பதைபதைத்துப் போன நீதியரசரின் கட்சிப் பிரதிநிதிகள் விழுந்தடித்து தொலைபேசி மூலமும் நீதியரசருடன் பேசினார்கள். பிறகு திரும்பி வந்தார்கள்.

*"நாங்கள் ஒரு முடிவை அறிவித்து இருக்கிறோம். புதிய – நல்ல – மாற்றமான – ஏற்கக் கூடிய – பொது முடிவு ஒன்று எட்டப்படுமானால் அதை நாங்கள் ஏற்போம். ஏற்பது மட்டுமல்ல. அதைப் பகிரங்கமாக அறிவிப்போம். நாம் ஏற்கனவே அறிவித்த முடிவு தவறானது என்றால், அது தவறு என்பதையும் பகிரங்கப்படுத்துவோம். அதற்குப் பின்நிற்கமாட்டோம்."* – என்றனர்.

அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை அடுத்தே கூட்டத்தில் நேற்றைய முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவு தொடர்பில் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

*"அனைத்து முக்கிய கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்னர்தான் நாம் ஒரு தீர்மானத்துக்கு வருவோம்."* – என்று ஆரம்பம் முதலே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறிவந்தார்.

முக்கியமாக ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் வரவில்லை. அது இன்றுதான் வெளிவரவுள்ளது. அது வெளிவந்த பின்னர்தான் – அதைப் பரிசீலித்த பின்னர்தான் – ஒரு முடிவு எடுக்கப்பட முடியும் என்பது சம்பந்தன் உட்பட தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் ஒரே முடிவு. அதுவே இப்போது தீர்மானமாக வந்திருக்கின்றது.

தமிழ்க்கட்சிகள் தமது ஒருமித்த கோரிக்கையாக முன்வைத்த 13 அம்சங்கள் தொடர்பிலும் இன்று வெளியாகும் ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பதில் இருப்பதாக நேற்றைய கூட்டத்தில் சுமந்திரன் குறிப்பிட்டார் என்று, கூட்டத்தில் பங்குபற்றிய பிறகட்சி ஒன்றின் பிரதிநிதி கூறினார்.

*"அப்படிக் கூறினீர்களா?"* என்று சுமந்திரனிடம் நேற்றிரவு கேட்டேன்.

அவர் ஆச்சரியத்துடன் *"இல்லவே இல்லை. அப்படியா சொன்னார்கள்?"* – என்று என்னிடம் திருப்பிக் கேள்வி எழுப்பினார்.

*"எங்கள் 13 கோரிக்கைகள் எல்லாவற்றையும் தாம் ஏற்றுக் கொள்கின்றார் என்றோ. அல்லது அவற்றுக்கு நேரடியாகச் சாதகமான பதில் தருகின்றார் என்ற பாணியிலோ சஜித் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவாரெனின் அவர் தோற்று விடுவது தவிர்க்க முடியாததாகி விடும்"* – என்றார் சுமந்திரன்.

*"ஆகவே, அப்படி இருக்கப் போவதில்லை"* – என்றார் அவர்.

*"ஒரு விடயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நாம் நடத்திய கூட்டத்தில் அடையாளம் காணப்படப்பட்ட இந்த 13 விடயங்களுக்கு முன்பிருந்தே அவர்களுடன் (ஐ.தே.கட்சியுடன்) நாங்கள் (கூட்டமைப்பு) பல அம்சங்கள் குறித்துப் பேசி வருகின்றோம். பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டிய கூட்டத்தில் எமது கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் விலாவாரியாக அவற்றை விவரித்தார். அந்த அம்சங்களின் அடிப்படையிலும் இருந்துதான் இந்த 13 அம்ச விடயங்களும் கூட முகிழ்த்தன. ஆகவே நாம் தொடர்ந்து பேசி வருகின்ற இந்த விவகாரங்கள் குறித்து ஐ.தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிச்சயம் பிரதிபலிப்பு இருக்க வேண்டும்? இருக்கும் என்றே நான் குறிப்பிட்டேன்.*

*"ஆகவே, நாம் குறிப்பிட்ட 13 அம்சங்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முற்றும் முழுதாக – விலாவாரியாகப் – பதில் இருக்கும் என நான் கூறவில்லை. கூறமுடியாது.*

*"ஆகவே, அப்படி இருக்கப் போவதில்லை. ஒன்று தொடக்கம் எத்தனை கோரிக்கைகளுக்கு இந்த விஞ்ஞாபனத்தில் பதில் உள்ளது என்பதைப் பார்ப்போம். அதைப் பார்க்காமல் நாம் ஒரு தீர்மானமும் எடுக்க முடியாது. எங்கள் கோரிக்கைகள் தொடர்பில் சாதகமான பதில் – முடிவு – இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது அப்படி இருக்கும் என்று நான் கூறவும் இல்லை."*

*"அது மட்டும்ல, வரிசைக் கிரமமாக எல்லாம் கோரிக்கைகளுக்கும் வரிசைக் கிரமமான பதில் அந்த விஞ்ஞாபனத்தில் இருக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் நிச்சயமாக பல விடயங்கள் இருக்க முடியும். அவற்றை நாம் ஊடுருவிப் பார்க்க வேண்டியிருக்கலாம்."* – என்றார் சுமந்திரன்.

ஐ.தே.கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் குறித்தும் அதன் விவரம் சுமந்திரனுக்குத் தெரிந்திருக்கும் என்ற சாரப்படவும் விடயங்கள் பேசப்பட்டபோது, பிறகட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டார்.

*"அது என்ன ஐ.தே.கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட முன்னர், அது பற்றிய விவரம் சுமந்திரனுக்கு மட்டுமே தெரியும் என்ற மாதிரிப் பேசுகின்றீர்கள். வேறு யாருக்கும் இங்கு அது தெரியாதா?"* – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

*"ஆம். அவருக்கு மட்டும்தான் அதன் விவரம் தெரியும் போலும்."* – என்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயாளர் நாயகம் துரைராஜசிங்கம்.

சுமந்திரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர். அவர் ஐக்கிய தேசியக் கட்சியினதும் துணைச் செயலாளரோ என்றும் கூடப் பலருக்கும் சந்தேகம் உண்டு. அந்தச் சந்தேகத்தை இன்னும் தூண்டிவிட்டிருக்கின்றது துரைராஜசிங்கத்தின் பதில்…!

– மின்னல் –

## அரசியல்கைதிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான சி.வீ. விக்கினேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தான் ஆட்சிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுவிப்பேன் என ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள விக்னேஸ்வரன், இதனைத்தானே நான் உங்களிடம் ஏற்கனவே கேட்டுள்ளேன் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஆட்சிக்கு வந்தால் தமிழ் அரசியல் கைதிகளைப் புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்வார் என ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ கூறி யிருக்கின்றமையை சுட்டிக்காட்டி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம்

ஒன்றை அனுப்பியுள்ள வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன், இதைத்தானே நான் உங்களிடம் ஏற்கனவே கூறியிருக்கிறேன், எதிர்வரும் போயா தினத்துக்குள் ஏன் நீங்கள் இதனைச் செய்யக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நீங்கள் செய்யக்கூடிய அதே விடயத்தைத் தான் ஜனாதிபதியானால் தாம் செய்ய முடியும் என்று ஒருவர் கூறும்போது நீங்களே அதனை செய்வதால் எந்த எதிர்ப்பும் இருக்கப்போவதில்லை என்றும் விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல்காரணங்களுக்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட இதனை எதிர்க்க மாட்டார் என்றும், 2015 ஆம் ஆண்டு உங்களை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு மிகவும் கடினமாக உழைத்த தமிழ் மக்களுக்கு இது ஒரு பிரதியுபகாரமாக இருக்கும் என்றும் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேனநாயக்க நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளை ஆரம்பிக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மகேஷ் சேனநாயக்க நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள தனது ஆதரவாளர்களைச் சந்தித்துத் தேர்தல் குறித்துக் கலந்துரையாடியமையுடன், யாழ். ஊடக மையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார்.(மேலும் செய்திகள் 13ஆம் பக்கத்தில்) (ஐ-07)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனப் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெவ்வேறாக அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காக தனித்தனியான ஜனாதிபதி செயலணிகளை உருவாக்கி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன்.

மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேரடித் தொடர்பை ஏற்படுத்தும் வகையில், பிரதேச செயலகங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன்.

தேசிய உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் வகையில், விவசாயத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கால்வாய்கள் மற்றும் குளங்களை புனரமைப்பதுடன், புதிய நீர்பாசனத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளேன்.

அதன்மூலம் சிறுபோக மற்றும் பெரும்போக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளேன்–என்றார். (ஐ)

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யர்கள் மற்றும் தபால் வாக்களிப்புக்கு விண்ணப்பித்த இராணுவத்தினர், தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 04 ஆம் திகதி இடம்பெறவுள்ள வாக்களிப்பில் மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ்நிலையங்கள் ஆகியவற்றில் இருந்து விண்ணப்பித்த தபால் வாக்காளர்கள் வாக்களிக்க முடியும்.

இந்தத்தினத்தில் வாக்களிக்கத் தவறிய வாக்காளர்கள் தாம் வசிக்கும் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 07 ஆம் திகதி வாக்களிக்க முடியும் எனத் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாட்டேன். இதுவரை நான் சட்டம், ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகாவை மாத்திரமே நியமிக்கிறேன் என அறிவித்துள்ளேன். வேறு யாரையும் நான் நியமிப்பேன் என அறிவிக்கவில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்றால் தாமே பிரதமராக தொடர்ந்து இருக்கப் போகிறார் எனப் பிரதமர் ரணில் அறிவித்துள்ள நிலையில் சஜித் நேற்று இந்த அதிரடி அறிவிப்பை விடுத்தார். (ஐ)

## யுத்த வெற்றியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனை இராணுவமோ, பொலிஸோ, அரசோ செய்யவில்லை என்றும் அதனைக் குழுக்களே செய்திருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனக்கு இந்த இடம் புதிதல்ல. இங்குள்ள மக்களுக்காக இந்தப் பிரதேசத்தில் நான் கடமையாற்றியிருக்கிறேன். இங்குள்ளவர்களின் பிரச்சினைகள், தேவைகள் எனக்கும் தெரியும். ஆகையால் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பேன்.

கடந்த பல வருடங்களாக நான் இராணுவத்தில் இருந்திருக்கின்றேன். இராணுவத்தில் இருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை யாற்றியிருக்கிறேன். இப்போது தேர்தலில் போட்டியிட்டு நாட்டுக்கு இன்னும் சேவை செய்யவே நான் வந்திருக்கின்றேன்.

நாட்டு மக்கள் அரசியல்வாதிகளால் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக சிங்களவர், தமிழர், முஸ்லிம் என இன ரீதியாகவும் அதேநேரம் இந்து, பௌத்தம், இஸ்லாம் என மத ரீதியாகவும் ஆட்சியார்களால் பகுக்கப்பட்டு பல பிரிவுகள் காணப்படுகின்றன.

இந்த நாட்டில் ஆரம்ப காலத்திலிருந்து ஏற்படுத்தப்பட்ட பிரிவுகள் தான் யுத்தத்திற்கு நாட்டை இட்டுச் சென்றன. இதனாலேயே கடந்த 30 வருடமாக நாட்டில் யுத்தமும் நடைபெற்றது. இதனால் தமிழர், சிங்களவர் என இரண்டு பக்கத்திலுள்ளவர்களுக்கும் போராட்டமாகவே வாழ்க்கை அமைந்தது.

ஆகவே இந்தப் பிரிவினைகளிலிருந்து விடுபட்டு வடக்கு – தெற்குக்கு இடையில் பாலம் அமைத்து அனைவரும் ஒன்றாக வாழ்வதற்குரிய நடவடிக்கைகளை ஏனையவர்களை விட என்னால் சிறப்பாகச் செய்ய முடியும். ஏனெனில் கடமையிலிருந்த காலத்தில் நாங்கள் என்ன செய்தோம் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆனால் மக்கள் அரசியல்வாதிகளின் பின்னால் சென்றமையால் இன்று அழுதுகொண்டு இருக்கின்றனர். ஆனால் நான் ஒரு சுயேச்சை வேட்பாளர். எனக்கு கட்சியில்லை. நான் நாட்டின் அரசியல்வாதியும் அல்லன். நான் நாட்டின் சேவையாளன். இந்தத் தேர்தலுக்காக எங்களிடமுள்ள பணத்தையே நாங்கள் செலவு செய்து வருகிறோம்.

இங்குள்ள மக்கள் வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றையே கேட்கிறார்கள். யுத்தத்தின்போது கல்வி பெரியளவில் பாதிக்கப்பட்டுக் காணப்பட்டது. இளைஞர்கள் தொழில் இல்லாமல் வாழ்க்கை நடத்துகிறார்கள். யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் வடக்கில் காணப்பட்டன. இன்றைக்கு அவற்றைக் காண முடிவதில்லை.

நாங்கள் மக்களின் காணிகளைக் கையளித்துள்ளோம். மிதிவெடிகளை அகற்றியுள்ளோம், 13 ஆயிரம் போராளிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கியுள்ளோம். இது மட்டுமல்லாமல் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே தான் மக்களின் பிரச்சினைகள், தேவைகள் எமக்குத் தெரியுமென்றும் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் நாம் கூறுகின்றோம்.

குறிப்பாக காணிப் பிரச்சினையில் 92 வீதமான அரச காணிகளும், 80 வீதமான தனியார் காணிகளும் விடுவிக்கப்பட்டன. ஆனாலும் தற்போது 3000 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படாமல் உள்ளது. அது இராணுவ முகாமோடு சுற்றியுள்ள பிரதேசதம். அந்தப் பிரதேசத்திற்குள்தான் பலாலி விமான நிலையம் அமைந்துள்ளது. அதனால் அதை விடுவிப்பதில் சிக்கல் உள்ளது. ஆகவே அந்தக் காணியின் உரிமையாளர்களுக்கு வேறு இடம் வழங்கப்பட வேண்டும். இல்லை என்றால் நட ஈடு வழங்கப்படவேண்டும் .

நாட்டில் கடத்தல், காணாமல் செய்யப்பட்டமை, தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்கள் இடம்பெற்றமை துரதிஷ்டவசமானது. இதனை இராணுவமோ, பொலிஸாரோ, ஏன் அரசோ செய்யவில்லை.

அது குழுக்களாலேயே செய்யப்பட்டிருக்கலாம். நான் ஆட்சிக்கு வந்தால் இதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். அதே நேரம் இப்போது எடுக்கப்படுகின்ற விசாரணைகளையும் வேகப்படுத்துவேன். அந்த விசாரணை நடவடிக்கைகளின்போது கட்சிகளோ அல்லது நபர்களோ கணக்கில் கொள்ளப்பட மாட்டார்கள்.

நான் முப்பது வருடமாக இராணுவத்தில் தொண்டாற்றியிருக்கிறேன். இந்த நேரத்தில் யுத்தத்தை வெற்றிகொண்டமை தொடர்பாகப் பலரும் பேசுகின்றனர். ஆனால் அவ்வாறு கூறுபவர்கள் சில காலம்தான் இராணுவத்தில் பணியாற்றியிருக்கின்றார்கள். ஆகவே யுத்த வெற்றி என்பது தனிநபர் வெற்றியல்ல. அது எல்லோரும் இணைந்த வெற்றியாகவே காணப்படுகின்றது.

அதாவது சமூக மட்டத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பொதுமக்கள் என அனைவரும் இணைந்து பெற்றுக்கொண்டதுதான் யுத்த வெற்றி. அவ்வாறு எல்லோருமாக இணைந்து பெற்ற வெற்றியைத் தனிநபர்கள் உரிமை கொண்டாட முடியாது – என்றார். (ஐ-07)

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ புதிய பிரதமர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்றும், சிலவேளை அவர் ஜனாதிபதியானால் – ரணிலை இனி பிரதமராக நியமிக்கப்போவதில்லையென்றும் தீர்மானித்துள்ளார் எனவும் எதிர்க்கட்சிகள் கூறி வந்த நிலையில் ரணிலின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் ஒப்பந்தம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் செய்யப்படுமெனவும் ரணில் அங்கு அறிவித்தார். (ஐ)

## முடிந்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் முடிந்தால் அதிலிருந்து தம்மை நீக்குமாறும் வசந்த சேனநாயக்க நேற்றுச் சவால் விடுத்தார்.

இதனை அவர் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று முந்தினம் இரவு அறிக்கையொன்றை விடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம், வசந்த சேனநாயக்க கட்சியில் இருந்து நீக்கப்படுள்ளார் எனவும் அவரின் அமைச்சுப் பொறுப்பும் பறிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே வசந்த சேனநாயக்க நேற்று ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதித் தேர்தலில் 5 தமிழ்த்தேசியக் கட்சிகள் இணைந்து தயாரித்துள்ள பொது ஆவணத்தின் அடிப்படையில் ஐந்து கட்சிகளுக்கும் இடையிலான கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமையுடன் தொடர்ந்தும் கூடி இறுதி முடிவை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஐந்து கட்சிகளின் நிலைப்பாடு குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிக்கையில் –

ஐந்து கட்சிகளாலும் உடன்பட்டு அவர்கள் சம்மதத்துடன் தயாரிக்கப்பட்ட இன்றைய கூட்டத்தின் இறுதி அறிக்கையை நாங்கள் தருகின்றோம். அதாவது தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஐந்து கட்சிகளும் இன்றைய தினம் (நேற்று) கூடி நாம் எதிர்நோக்கியிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாகத் தொடர்ந்தும் கலந்துரையாடியுள்ளோம்.

தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவராத சூழ்நிலையில் நாளைய (இன்றைய்) தபால் மூல வாக்களிப்பில் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு நாம் தமிழ் மக்களைக் கோர முடியாது. ஆயினும் தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையைத் தவறாது பிரயோகிக்க வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவராத பட்சத்தில் ஒரு முடிவை எடுக்க முடியாமல் உள்ளது. அதனால் அனைவரும் வாக்களிக்க வேண்டுமெனக் கோருகின்றோம். ஏனெனில் இன்னும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவரவேண்டியுள்ளன. அவ்வாறு வெளிவரவுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களில் சில விடயங்கள் சேர்க்கப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு சொல்லப்பட்டிருக்கும் வாக்குறுதிகளினால் எம்மால் ஒரு முடிவை எடுக்க முடியாமல் உள்ளது. ஏனெனில் அதற்கான சில நடவடிக்கைகள் நடக்கும் நிலையில் எங்களால் அது மழுங்கடிக்கப்பட்டதாக இருக்க நாம் விரும்பவில்லை. ஆகையால் விஞ்ஞாபனங்கள் வெளிவந்த பின்னர் மீளக்கூடி ஆராய உள்ளோம்.

அதன் பின்னர் ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனாலும் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் என்ற வகையில் காலத்தை வீணடித்து மக்களைக் குழப்ப நாம் விரும்பவில்லை. ஆகவே இப்போது நடக்கவுள்ள தபால் மூல வாக்களிப்பில் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துமாறு மக்களிடம் கேட்கிறோம். அதன் பின்னர் அதாவது வேட்பாளர்களது விஞ்ஞாபனம் வெளியாகியதையடுத்து கூடி முடிவை எடுப்போம். அதேநேரம் இதனை ஏற்பாடு செய்தவர்கள் என்ற அடிப்படையில் மாணவர் ஒன்றியமாக எங்கள் நிலைப்பாட்டையும் நாம் அறிவிப்போம் – என்றனர்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் செயலாளர் சிறீகாந்தா, வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கை பரப்புச் செயலாளர் கந்தையா அருந்தவபாலன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-07)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தானே பிரதமர் என்று குறிப்பிடும் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து ஒருபோதும் நிறைவேறாது. நவம்பர் 16 ஆம் திகதி ஜனாதிபதியை மாத்திரமல்ல பிரதமர் மற்றும் அவர் தலைமையிலான புதிய அரசையும் நாட்டு மக்கள் புறக்கணித்துத் தெரிவு செய்வார்கள்.

2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் தவறான தீர்மானத்தை முன்னெடுத்தமையை, மக்கள் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாகத் திருத்திக் கொண்டார்கள். அத்தோடு அன்றே ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாகப் புறக்கணித்தும் விட்டார்கள்.

இந்நிலையில் எதிர்காலத்தில் நாட்டு மக்கள் மீண்டும் அரசியல் ரீதியில் தவறான தீர்மானத்தை முன்னெடுக்க மாட்டார்கள் என நான் நம்புகின்றேன் – என்றார்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'சுரக்கிமு ஸ்ரீலங்கா' என்ற அமைப்பினால் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இரண்டு மருத்துவப் பல்கலைக்கழகங்களில் இலங்கையர்களைச் சேர்க்கும் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாகவே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் மக்களைக் காணாமல் ஆக்கிவிட்டு இங்கே சிங்கள வேட்பாளர்கள் என்ன முகத்துடன் வாக்கு கேட்டு வருகிறார்கள்? அவர்களுக்கு நாங்கள் வாக்களிக்கக்கூடாது. மீன் சின்னத்திலே போட்டி போடும் தமிழ் வேட்பாளருக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும். – எனவும் காணாமற்போனோரின் உறவுகள் குறிப்பிட்டனர்.

தமிழ் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்கள் ஒருங்கிணைந்த கொள்கையுடன் ஒன்றுபட்டுள்ளனர் என்பதை உலகுக்குக் காண்பிக்க இது ஓர் அரிய வாய்ப்பு எனஜ் குறிப்பிட்டு மீன் சின்னம் பொறிக்கப்பட்டு அதற்கு புள்ளடியிடப்பட்ட பதாதைகளைப் போராட்டத்தில் கலந்துகொண்ட காணாமற்போனோரின் உறவுகள் நேற்றுத் தாங்கியிருந்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## மைத்திரியின் சறுக்கல்...!

இன்னும் பதினாறு நாள்களில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து மூடை, முடிச்சுக்களோடு நடையைக் கட்ட வேண்டிய யதார்த்தம் – நிஜம் – தம்மை நெருங்கும்போதுதான் கள நிலைவரத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கின்றார் போலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பதவிக் கதிரையில் அழுத்தமாக அமர்ந்திருந்தபோது உலக வல்லரசான அமெரிக்காவுக்கே சவால் விடுபவர் போல நீட்டி முழங்கியவர் இப்போது, பதவிக் காலத்தின் அந்தத்தில் – இன்னும் இரண்டு வாரங்களில் அதிகாரம் கையைவிட்டுப் போகத் தாம் வெறும் 'முன்னாள்' ஆகிவிடுவோம் என்ற நிதர்சனம் புரியத் தொடங்கும்போது – பெட்டிப் பாம்பாகிக் கூனிக் குறுகியிருக்கின்றார் போலும்.

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்திடமிருந்து 48 கோடி டொலர் நன்கொடை உதவியைப் பெறுவது தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்த போதே ஜனாதிபதி மைத்திரிபாலவின் பதவிக்கான இறுதிக் காலத்தில் அவரது பதற்றம் – பலவீனம் – வெளிப்படத் தொடங்கி விட்டது எனலாம்.

மிலேனியம் சவால் நன்கொடையை அமெரிக்கத் தரப்பிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விடயத்தில் கடந்த ஓராண்டுக்கு மேலாகவே ஜனதிபதி மைத்திரிபால சிறிசேன பெரும் பிகு பண்ணிக் கொண்டிருந்தார் என்பது தெரிந்ததே.

மேற்படி உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு வழி செய்யும் அமைச்சரவைப் பத்திரம் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் பல தடவைகள் முன்வைக்கப்பட்ட போதும் – அரசுத் தரப்பு அமைச்சர்கள் பல தடவைகள் விடாது அழுத்தம் கொடுத்த போதும் – அதற்கு இடம்கொடுக்காமல், அமைச்சரவையின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முட்டுக்கட்டை போட்டுத் தடுத்துவந்தார். அந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி அளிக்கின்றமையை பலமுறை நிராகரித்து இழுத்தடித்து வந்தார்.

"அமெரிக்காவுடனான ஒப்பந்தத்துக்கு நான் ஒப்புதல் அளிக்க மட்டேன். வேண்டுமானால் இனி வரக் கூடிய புதிய அரசு இது குறித்து முடிவெடுக்கட்டும்." – என்று தெரிவித்து, இந்தப் பிரச்சினையை அந்தரத்தில் தொங்கவிட்டு விட்டுச் செல்லவே அவர் விரும்பினார்.

அவர் ஜனாதிபதியாகத் இருந்து தலைமை வகிக்கக் கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டம் இன்னும் ஒன்று அல்லது இரண்டு இருக்கையில் திடீரெனத் தமது நிலைப்பாட்டை அவர் மாற்ற வேண்டியவராகியிருக்கின்றார்.

இந்த அமெரிக்க மிலேனியம் சவால் நன்கொடையை நான் அங்கீகரிக்கவே மாட்டேன் என்று பகிரங்க – பொது வெளியில் – அறிக்கைகள், அறிவிப்புகள் வெளியிட்டு, தம்மை அமெரிக்க எதிர்ப்பாளர் போலவும் காட்டிக் கொண்ட மைத்திரியார், இப்போது பதவியை விட்டு வெளியேறும் சமயத்தில் தமது சுருதியை மாற்ற வேண்டியவராகியிருக்கின்றார்.

அமைச்சரவையில் என்ன நடந்தது என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆனால், நீண்ட பல மாதங்களாக இந்த விடயத்துக்கு அமைச்சரவை அனுமதி கிடைப்பதைத் தடுக்க முடிந்த அவரால், இப்போது தடுக்க முடியவில்லை. அமைச்சரவை அனுமதி அதற்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆண்டு அரசமைப்புச் சதி மூலம், மஹிந்த ராஜபக்ஷவைப் பின்கதவால் பிரதமராகிய மைத்திரிபால சிறிசேன, அது தவறான நடவடிக்கை, அந்தப் பிரதமர் நியமனமும், அதை ஒட்டிய பொதுத்தேர்தல் அறிவிப்பும், சட்டரீதியாக செல்லுபடியற்றவை என்று உயர் நீதிமன்றம் பிரகடனப்படுத்திய போது மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பதவியில் அமர்த்த வேண்டியவரானார்.

அச்சமயத்தில், தான் பதவியில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கவோ, சத்தியப் பிரமாணம் செய்யவோ மாட்டேன் என்று அடம்பிடித்து, பகிரங்க அறிவிப்புக்களை விடுத்தவர் இதே மைத்திரிபால சிறிசேனதான்.

ஆனால், இப்போது போல, தமது பிரதிஞ்ஞையைத் தாமே புறமொதுக்கி மீறி, ரணிலைப் பிரதமராக நியமித்து, சத்தியப் பிரமாணம் செய்து வைத்தமை மட்டுமல்லாமல், இன்று வரை பிரதமர் ரணில் தலைமையிலான அரசுடனும், அமைச்சரவையுடனும்தான் தமது பதவியைக் கொண்டிழுக்க வேண்டியவராக அவர் இருக்கின்றார்.

முன்னுக்கு ஒன்று கூறி, அடம் பிடித்து, பின்னர் முடிவைத் தலைகீழாக மாற்றி, முரண்பாடாக நடத்து கொள்வதுதான் மைத்திரிபால சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சிக் காலப் பண்பியல்புபோலும்.

நீதிமன்ற அவமதிப்புச் குற்றத்துக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுஜன பெரமுனவின் தலைவர் வண. கலகொட அத்த ஞானசாரதேரருக்கு மன்னிப்பு அளித்து விடுவித்தன் மூலம் நீதித்துறைக்கான மேன்மைத் தன்மையை கேலிக்குள்ளாக்கியமையில் தொடங்கி –

இந்த நாட்டில் 42 ஆண்டுகளாக முன்னெடுக்கப்படாத மரண தண்டனை முறைமையை, அரசியல் அதிகாரச் செல்வாக்கைத் தேடும் தமது நோக்கத்தைத் தாம் அடைவதற்காக மீண்டும் நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சி வரை –

இப்படித் தமது பதவிக்காலத்தில் மைத்திரிபால சிறிசேன பண்ணிய குசும்புத்தனங்கள் அதிகம்.

அதில் ஒன்றுதான் அமெரிக்க மிலேனியம் சவால் நன்கொடை திட்டத்தை ஆரம்பத்தில் எதிர்த்த அவரது கற்றுக்குட்டி அரசியல் போகுக்கும் கூட.

# மடு திருத்தலப் பிரதேசம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை மகிழ்ச்சி

## தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

மன்னார் மாவட்டத்தில் மடுதிருத்தலம் அமைந்துள்ள பிரதேசம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

சுமார் 450 ஆண்டுகள் வரலாறு கொண்ட மடுதிருத்தலம்,கத்தோலிக்க பக்தர்களின் யாத்திரைக்குரிய புனிதத் தலமாக மட்டுமன்றி பௌத்த மற்றும் இந்து பக்தர்களினதும் வழிபாட்டிற்குரிய தலமாகவும் ஒற்றுமையின் சின்னமாகவும் விளங்கிவருகின்றது.

இத்தகையபெரும் சிறப்புமிக்க இந்த மடு தேவாலயத்தை புனித பூமியாக பிரகடனப் படுத்துவதற்கு அயராது பாடுபட்ட கத்தோலிக்க குருமார்களுக்கும் மற்றையோருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் கோரிக்கையை ஏற்று அங்கீகாரம் அளித்து நடவடிக்கை எடுத்த அமைச்சரவை உறுப்பினர்களுக்கு மற்றும் ஜனாதிபதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வணக்கத்திற்குரிய பாப்பாண்டவர் பிரான்சிஸ் மடு வந்தபோது அவரைச் சந்திக்கும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நவீன காலத் தெய்வமனிதர்களில் அவரும் ஒருவரே.

மடு திருத்தல பிரதேசம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை காரணமாக,போர் நடைபெற்ற காலத்தில் மிகமோசமாக பாதிப்புக்களுக்கு உள்ளான மடு திருத்தலம் மென்மேலும் வளங்களையும் சிறப்புகளையும் பெற்று எமது மக்களுக்கு தொடர்ந்தும் நல்ல முறையில் இறைபணிகளையும் சமூகப் பணிகளையும் ஆற்றும் என்று எதிர்பார்க்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

# கிழக்கில் அபிவிருத்திப் புரட்சி

## உறுதியளித்தார் கோட்டாபய



மட்டக்களப்பு, ஒக். 31

"கிழக்கு மாகாணத்தை மையப் படுத்திய புதியதோர் பொருளாதார மேம்பாட்டு புரட்சியின் பங்காளிகளாக இருக்க உங்களுக்கு ஒரு பெரும் வாய்ப்பு, எமது ஆட்சியில் கிடைக்கவுள்ளது. கிழக்கில் அபிவிருத்தியை மஹிந்த ஆட்சியே செய்தது. நீங்கள் என்னை நம்புங்கள். நான் உங்களையும் நாட்டையும் பாதுகாப்பேன்."

– இவ்வாறு நேற்று முன்தினம் மட்டக்களப்பில் தெரிவித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ.



# நில அளவை திணைக்களத்துக்கு எதிராக சிவமோகன் எம்.பி. நேற்று முறைப்பாடு



வவுனியா, ஒக். 31

தேர்தல் காலத்தில் வவுனியா , மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த நில அளவைத் திணைக்களத்தினர் பொது மக்களின் காணிகளை அளவீடு செய்து இராணுவத்தினருக்காக சுவீகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்து வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள தேர்தல் திணைக்களத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நேற்றுக் காலை முறைப்பாடு மேற்கொண்டார்.

முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் –

மிகவும் துரிதமாக நில அளவை திணைக்களத்தினர் பொதுமக்களின் காணியை அளவீடு செய்து சுவீகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றனர். தேர்தலைச் சாட்டாக வைத்து மக்களைத் திரட்ட முடியாது, தேர்தல் சட்டத்தின் பிரகாரம் மக்களின் எதிர்ப்புக்கள் வராது என்பதை நோக்கில் கொண்டு அதனைச் சுவீகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதனை நான் வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருக்கும் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளேன். உடனடியாக அவர்கள் இதனை நிறுத்த வேண்டும். எனவே இந்த நடவடிக்கையை நில அளவை திணைக்களத்தினர் நிறுத்த வேண்டும் – என்றார். (ஐ – 100)

**நாளை** 01.11.2019 வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: மூலம் பி.இ 2.23 வரை
திதி : பஞ்சமி பி.இ 5.06 வரை
இராகுகாலம் : 10.33 – 12.03
சுப நேரம் : 6.03 – 7.33

# மிலேனியம் சவாலுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 31

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்திடம் இருந்து, 48 கோடி டொலர் கொடையைப் பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தக் கொடையின் மூலம், கொழும்பு நகர போக்குவரத்து முகாமைத்துவம், நாடு முழுவதும் வீதிகள் கட்டுமானம் மற்றும் காணி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்துடன், நிதி அமைச்சு கூடிய விரைவில் இந்த உடன்பாட்டில் கையெழுத்திடும். இந்த திட்டம் 2020ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

மிலேனியம் சவால் கொடையை பெற்றுக் கொள்வதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அனுமதி கோரும், அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பல முறை நிராகரிக்கப்பட்டு இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இறுதியில், புதிய அரசு இது குறித்து முடிவெடுக்கட்டும் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். எனினும், திடீரென நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கோண்டாவில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 31

கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை முதல்வர் கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனும் , சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகிலதாஸ், கோண்டாவில் வடகிழக்கு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி சுகிர்தா விஷ்ணுரஞ்சன், ஓய்வுநிலை உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் கணபதிப்பிள்ளை தில்லைநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

## அமெரிக்கா வரவேற்பு



கொழும்பு, ஒக். 31

மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் கொடைக்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவை எடுத்துள்ள முடிவுக்கு அமெரிக்கா வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் அனுமதி கிடைக்காமையால் நீண்ட நாள்களாக இந்தக் கொடையைப்பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற முடியாமல் இருந்து வந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மிலேனியம் சவால் கொடை உடன்பாட்டுக்கு அமைச்சரவை அனுமதி அளிக்கப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இந்த உடன்பாட்டின் கீழ் இலங்கை உத்தேச திட்டங்களின் அனைத்து அம்சங்களையும் மேற்பார்வையிடும் மற்றும் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ளும்.

காணி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான வரலாற்று ரீதியாக இலங்கை அரசின் முன் முயற்சிகளுக்கான ஆதரவும் இதில் அடங்கும். இந்த உடன்பாட்டுக்கு இலங்கை அங்கீகாரம் அளித்துள்ளதை அமெரிக்கா வரவேற்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைமீள் பதிவுசெய்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச்செயலர் அலிஸ்வெல்ஸ்,

இலங்கை 48 கோடி டொலர் மிலேனியம் சவால் கொடைக்கு ஒப்புதல் அளித்தது ஒரு சிறந்த செய்தி. இந்தக் கொடை, போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் நில முகாமைத்துவ செயல்முறைகளை மேம்படுத்த உதவும். அனைத்து இலங்கையர்களுக்கும் வலுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு பங்களிக்கும் என்றார். (ஐ)

# தெரிவுக்குழுவின் அறிக்கையை தூக்கிக் கடாசினார் மைத்திரி!

கொழும்பு, ஒக். 31

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இந்த அறிக்கையை ஏற்கமுடியாது எனக் கூறிய ஜனாதிபதி சிறிசேன, அதை அமைச்சரவை அனுமதி அளித்ததாக பதிவு செய்யவேண்டாம் என்றும், அமைச்சரவைச் செயலருக்குப் பணித்தார்.

அதற்குப் பதிலாகப் பாதுகாப்பு குறைபாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்ட பகுதிகளை ஆராயுமாறு அரசிடம் கேட்டுக் கொண்டார்.



நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்கு பிரதானமாக, அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் குற்றம்சாட்டப்பட்டிருந்தார். அத்துடன், அரச தலைவர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. (ஐ)

## தாத்தாவானார் மஹிந்த!

கொழும்பு, ஒக். 31

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் – ரோஹித – டட்யானா தம்பதியினருக்கு நேற்றுக் காலை ஆண் குழந்தை பிறந்தது.

கொழும்பு நவலோக வைத்திய சாலையில் பிறந்த குழந்தையை பார்வையிட்ட மஹிந்த, மகிழ்ச்சியில் அங்கிருந்த உறவினர்களுக்கு இனிப்பு வழங்கினார். (ஐ)







# முல்லைத்தீவில் வாள்வெட்டு

முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவு - முள்ளியவளை முதலாம் வட்டாரம் பகுதியில் நேற்று முன் தினம் இறுதிச்சடங்கு ஒன்றை அடுத்து, இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஏழு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில், ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி வாள்வெட்டு வரைச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். காயமடைந்தவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (ஐ)






# வசந்த சேனநாயக்கவை தூக்குகின்றது ஐ.தே.க.!

கொழும்பு, ஒக். 31

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவை உடனடியாகக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவு செய்துள்ளதாகக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் விரைவில் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்தும் நீக்கப்படுவார் என்றும் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்க முடியாது என்று வசந்த சேனநாயக்க அண்மையில் அவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே வசந்த சேனநாயக்கவைக் கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தஆண்டுஆட்சிக்கவிழ்ப்பை அடுத்து, மஹிந்த ராஜபக்ஷவின் 52 நாள் அரசில் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்ட வசந்த சேனநாயக்க பின்னர், ஐ.தே.கவுக்குத் திரும்பியிருந்தார்.

இந்தமுறை அவர் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## மூணாறு அருகே பயணிகளை பீதியில் ஆழ்த்தும் படையப்பா



கேரள மாநிலம் மூணாறு அருகே மலைப்பாதையில்குறுக்கிட்ட ஒற்றைக் காட்டு யானை, ஒரு மணி நேரத்துக்குப் போக்குவரத்தை முடக்கிவாகன ஓட்டிகளைப் பீதியில் ஆழ்த்தியது.

'படையப்பா' என்ற பெயர் கொண்ட அந்த யானை, இதுவரை 13 பேரைத் தாக்கிக் கொன்றுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த ஒருவாரகாலமாக கன்னிமலை நயமக்காடு பகுதியில் உலா வரும் படையப்பா, அவ்வப்போது மலைப் பாதையை மறித்து வாகன ஓட்டிகளைப் பீதியில் ஆழ்த்தி வருவதாகக் கூறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை மதியம் மூணாறு – மறையூர் சாலையில் முகாமிட்ட படையப்பா, சாலை நடுவே நின்றுகொண்டு வாகனங்களை இருபுறமும் செல்லவிடாமல் தடுத்தது. தகவலறிந்து வந்த வனத்துறையினராலும் யானை படையப்பாவை அந்த இடத்தை விட்டு அசைக்க முடியவில்லை. சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்தை முடக்கிய படையப்பா, மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்த பின்னரே வாகன ஓட்டிகள் நிம்மதியடைந்தனர்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 எம்.பிக்கள் காஷ்மீரில் நிலைமையை நேரில் ஆராய்வு



ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 எம்பிக்கள் கொண்ட குழுவினர் ஜம்மு காஷ்மீரில் ஆய்வு செய்தனர்.

அங்குள்ள கிராம நிர்வாகிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளை நேரில் சந்தித்து தற்போதைய நிலைவரங்களை அவர்கள் கேட்டறிந்தனர். பாகிஸ்தானின் அத்துமீறல்கள், தீவிரவாத ஊடுருவல்கள், எல்லையில் கைப்பற்றப்பட்ட பாகிஸ்தான் முத்திரை பதித்த ஆயுதங்கள் போன்றவை இக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதனிடையே காஷ்மீரில் உள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்க வேண்டும் என்று ஐநா.சபையின் மனித உரிமைக்குழு வலியுறுத்தியுள்ளது. மனித உரிமைகள் முழு அளவில் அங்கு மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

86 ஆவது நாளாக காஷ்மீரில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ள ஐநா.சபையின் மனித உரிமைக் குழு செய்தித் தொடர்பாளர் ரூபார்ட் கோல்வில், காஷ்மீர் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றமை மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சிறை வைக்கப்பட்டுள்ள 100க்கும் மேற்பட்ட காஷ்மீர் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும், இராணுவத்தினர் அதிகாரத்தை மீறாமல் கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் என்றும் ஐநா. மனித உரிமைக்குழு வலியுறுத்தியுள்ளது.

## இந்தியாவில் தலைமை நீதிபதியாக சரத் அரவிந்த போப்டே நியமனம்

புதுடில்லி,ஒக்.31

இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் 47ஆவது தலைமை நீதிபதியாக சரத் அரவிந்த போப்டே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் அயோத்தி வழக்கின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் போப்டே இடம்பெற்றுள்ளார். அயோத்தி வழக்கில் வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்குள் இறுதித் தீர்ப்பு வெளியாக உள்ளது.

போப்டே மேலும் பல முக்கிய வழக்குகளையும் விசாரித்துள்ளார். தனிநபர் உரிமை குறித்த வழக்கை விசாரித்து கடந்த 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தீர்ப்பளித்த வழக்கிலும் போப்டே நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார்.

மகாராஷ்ட்ராவின் வழக்கறிஞர் குடும்பத்தைச் சேர்ந்த போப்டே உச்சநீதிமன்றத்தில் உள்ள மூத்த நீதிபதிகள் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருப்பவர். முதலிடத்தில் உள்ள தற்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகய் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். 63 வயதான போப்டே அதன் பின்னர் 17 மாதங்கள் இப்பதவியில் நீடித்திருப்பார்.

## சீனாவின் அணு ஆயுதம் தாங்கி நீர்மூழ்கிகள் இந்தியப் பெருங்கடலுக்குள் ஊடுருவலாமாம்

### இப்படிப் புதுடில்லியை எச்சரிக்கின்றது அமெரிக்கா

புதுடில்லி,ஒக்.31

இந்தியப் பெருங்கடலுக்குள் சீனாவின் விமானம் தாங்கிக் கப்பல்கள் ஊடுருவ வாய்ப்புள்ளதாக இந்தியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் பசிபிக் கடற்படை கொமாண்டரான அட்மிரல் ஜான் அக்கிலினோ டெல்லி வந்துள்ளார். அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியக் கடற்பகுதிக்குள் சீனப் போர்க்கப்பல் ஊடுருவினால் அது ஆச்சரியமான வியமல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

போர்க்கப்பல்களை மிக அதிக அளவில் சீனா குவித்து வருகிறது. அந்நாட்டு கடற்படையில் இணைக்கப்பட்டுள்ள புதிய போர்க்கப்பல்களான 54 ஃபிரிகேட், 52 d destroyer போன்ற கப்பல்களும் கடல் தாக்குதல் தடுப்பு ஏவுகணைகளும் மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களாக இருக்கின்றன எனவும் அட்மிரல் அக்கிலோனோ தெரிவித்துள்ளார்.



கடந்த பத்தாண்டுகளில் சீனா அணு ஆயுதம் தாங்கி நீர்மூழ்கிக் கப்பல்களையும் இந்திய பெருங் கடலுக்குள் ஊடுருவச் செய்துள்ளதை இந்தியக் கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர். இவை நிறுத்தப்படப் போவதில்லை. இவற்றின் எண்ணிக்கை மேலும் அதிகமாகவே வாய்ப்புள்ளது என்றும் அட்மிரல் அக்கிலோனோ தெரிவித்துள்ளார்.






## காஷ்மீரில் வெளிமாநிலங்களைச் சேர்ந்தோர் தீவிரவாதிகளால் வேட்டையாடப்படும் அவலம்

### இரண்டு நாள்களில் ஆறு பேர் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர்,ஒக்.31



காஷ்மீரில் மேற்கு வங்காளத்தைச்சேர்ந்த 5தொழிலாளர்கள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மேற்குவங்காளதொழிலாளர்கள் 5 பேரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

இதேசமயம், திங்களன்று அனந்தநாக் மாவட்டத்தில் உள்ள சோபூர் பகுதியில், வெளிமாநிலத்தைச் சேர்ந்த டிரக் சாரதி ஒருவரையும் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

தொடர்ந்து வெளி மாநிலத்தவரைக் குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது, அங்கு பணியாற்றும் வெளி மாநிலத்தவர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க மாநில தொழிலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பம் கேள்விப்பட்டதும் தாம் அதிர்ச்சி அடைந்ததாக தெரிவித்துள்ள மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தொழிலாலர்களின் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்றார்.

சிறப்பு அந்தஸ்து ரத்துக்குப் பிறகு ஜம்மு காஷ்மீரில் நிலவும் சூழல் குறித்து ஆய்வு செய்ய, ஐரோப்பிய யூனியன் எம்.பிக்கள் குழு அங்கு சென்றுள்ள சூழலில், தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir



# பிலிப்பீன்ஸ் நிலநடுக்கத்தில் 7 பேர் பலி; 100 பேர் காயம்







மணிலா,ஒக்.31

தெற்கு பிலிப்பீன்ஸில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 7 பேர் பலியாகினர் எனவும், 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு பிலிப்பீன்ஸில் செவ்வாய் காலை 8.12 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 5.8 ஆகப் பதிவானது. இந்த நில நடுக்கம் ஒரு நிமிடம் வரை நீடித்ததால் விடு மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்த மக்கள் உயிர் பயத்தில் ஓட்டம் பிடித்து தெருக்களில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் மற்றும் ஒரு பள்ளிக்கூடம் எனப் பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. பள்ளியில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற ஒரு சிறுவன் மீது சுவர் இடிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். 5 மாணவர்கள் காயமடைந்தனர்.


கோரனாடல் என்ற பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் 66 வயது மதிக்கத்தக்க ஒருவர் பலியானார்.

ஏழு பேர் வரை உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியான நிலையில் சுமார் 100 பேர் காயங்களுடன் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்

## நவாஸ்ஷெரீப்பின் உடல் நிலைமை கவலைக்கிடம்

இஸ்லாமாபாத்,ஒக்.31

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின்(வயது69) உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. பனாமா ஆவண முறைகேடு வழக்கில் சிறை தண்டனை விதிக்கப்பட்ட அவர் மருத்துவ சிகிச்சைக்காகப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நவாஸ் ஷெரீப்புக்கு ரத்த தட்டணுக்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதால், அவர் உயிருக்குப் போராடி வருகிறார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நவாஸ் ஷெரீப்பை நாம் இழக்கக் கூடும் என்று அவரது தனிப்பட்ட மருத்துவர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்.

## அமெ. பல்கலை மாணவர்களின் இரவு விருந்தில் சூடு; 2பேர் பலி!

### 14 பேர் காயம்; கொலையாளி கைது




வொஷிங்டன்,ஒக்.31

அமெரிக்காவில் இரவு நேர விருந்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் இரு மாணவர்கள் உயிரிழந்தனர். அவர்களைக் கொன்றவர் எனக் கூறப்படுபவர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்கள், கடந்த சனிக்கிழமை இரவு நேர விருந்துக்கு ஏற்பாடு செய்து இருந்தனர்.

கிரின்வில்லே நகரில் சுமார் 750 பேர் உற்சாகமாக இந்த நிகழ்ச்சியை கொண்டாடிக்கொண்டிருந்த போது, அங்கு துப்பாக்கியுடன் வந்த நபர், கண்மூடித்தனமாகச் சுடத்தொடங்கினார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மாணவர்களான கெவின் பெர்ரி (வயது 23), பைரன் கிராவன் (23) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 14 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதையடுத்து துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இந்த நிலையில் 2 பேரை சுட்டுக்கொன்ற கிரின்வில்லேவை சேர்ந்த பிராண்டன் ரே கோன்சலஸ் (23) என்பவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

## மக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக லெபனான் நாட்டுப் பிரதமர் ராஜினாமா



மக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக லெபனான்நாட்டுபிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், கூடுதல் வரி, வாட்ஸ்அப் பயன்படுத்த வரிபோன்ற காரணங்களால் அதிருப்தியடைந்த மக்கள் போராட்டத்தில் இறங்கினர். கடந்த 13 நாள்களாக நாடே முடங்கிப் போகும் அளவிற்கு போராட்டங்கள் நடந்தன.

இந்த நிலையில் மக்களின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத அந்நாட்டுப் பிரதமர் ஷாத் ஹரிரி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை அந்நாட்டு அதிபர் மைக்கேல் அவுனிடம் அவர் வழங்கினார்.

## ஆப்கானில் தாக்குதல்; 11 தலீபான்கள் மரணம்

ஆப்கானிஸ்தானில். பாதுகாப்புப் படையினர் தாக்குதலில் 11 தலீபான்கள் உயிரிழந்தனர். ஆயுதக் கிடங்கு அழிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானுக்கு அச்சுறுத்தலாக உள்ள தலீபான் தீவிரவாதிகளை ஒடுக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2 தினங்களுக்கு முன்பு வான்வழித் தாக்குதலில், 53 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் அந்த நாட்டின் கிழக்கு மாகாணமான நங்கர்ஹாரில் உள்ள பலீல் கெல் பகுதியில், தீவிரவாதிகளின் முகாமைப் பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர். இந்தத் திடீர் தாக்குதலால் தலிபான்கள் நிலைகுலைந்தனர். அவர்களில் 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், 8 பேர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டனர்.



மேலும் தலிபான்கள் பயன்படுத்திய ஆயுதக்கிடங்கு அழிக்கப்பட்டது. அங்கிருந்து துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள், வெடிபொருள்கள், 2 மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பு படையினர் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikathir





# ஆழ்துளைக் கிணற்றில் சுஜித்தின் மரணம்

## அலட்சியங்களுக்கு கிடைத்த சவுக்கடி!

தமிழக அரசு இயந்திரம், சமூக பணியாளர்கள், துறை சார் வல்லுநர்கள், பொதுமக்கள் இணைந்து போராடிய மிகப் பெரிய போராட்டம் தோல்வியில் முடிவடைந்திருக்கிறது.

ஏறக்குறைய 80 மணி நேராக நடைபெற்ற போராட்டம் செவ்வாய் அதிகாலையுடன் (29.10.2019) நிறைவுக்கு வந்திருக்கிறது.

கடந்த 25 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 05.30 மணியளவில் திருச்சி மாவட்டத்தின் நடுக் காட்டுப்பட்டி எனும் சிற்றூரில் வாழ்ந்து வந்த விவசாயக் குடும்பத்தின் கடைசி மகன் சுஜித் ஆழ்துளை கிணற்றுக்குள் வீழ்ந்தமை, அடுத்த சில மணி நேரங்களிலேயே தமிழகம் முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது.

அந்த விடயம் பரவிய உடனேயே அப்பகுதி பொது மக்கள் உடனடியாக களத்தில் இறங்கி செயற்பட படிப்படியாக நடுக்காட்டுப்பட்டி எனும் பெயர் உலகெங்கும் வாழ் தமிழர்களின் கவனத்தை பெறுகிறது.

தமிழக அரசின் முக்கிய அமைச்சர்களான விஜயபாஸ்கர், வெல்லமண்டி நடராஜன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கூடுகின்றனர்.

ஆழ்துளை கிணறுகளின் அபாயம் தொடர்பில் தொடர்ந்து செயற்பட்டு வரும் மதுரை மணிகண்டன் போன்றவர்கள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்படுகின்றனர்.

அண்ணா பல்கலைக்கழகம் உட்பட்ட தமிழகத்தின் மிக முக்கியமான பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களின் உதவிகளும் அவர்களது கண்டுபிடிப்புக்களும் சிறுவனை மீட்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

சற்றே தாமதமாக சம்பவ இடத்துக்கு தேசிய பேரிடர் மேலாண்மை குழு வருகின்றது.

மேற்கூறப்பட்ட எந்த அல்லது எவரது முயற்சிகளும் பலனளிக்காமல் போக சிறுவன் வீழ்ந்த துளைக்கு அருகில் மற்றொரு துளை தோண்டி அதனுள் தீயணைப்பு வீரர்களை உள்ளிறக்கி சுஜித்தை காப்பாற்றுவது என முடிவெடுக்கப்படுன்றது அந்த செயற்றிட்டங்களுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் ரிக் இயந்திரம் வரவழைக்கப்பட்டு குழி தோண்டும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் குறித்த இயந்திரத்தின் வேகம் போதாது என விமர்சனங்கள் எழுப்பப்பட, அவ்வியந்திரத்தை காட்டிலும் மூன்று மடங்கு வேகமாக செயற்படக்கூடிய மற்றொரு ரிக் இயந்திரம் வரவழைக்கப்பட்டு குழி



தோண்டப்படுகிறது. ஆனால் பாறைகளின் காரணமாக அதுவும் செயற்படுத்த முடியாமல் போக ஆழ்துளை கிணறுகள் தோண்ட பயன்படுத்தப்படும் இயந்திரத்தின் உதவியுடன் சிறுவனை சென்றடைந்த குழு அவனது சடலத்தை மாத்திரம் வெளியே கொண்டு வந்திருக்கிறது.

### சமூகம் விழித்துக் கொள்ள இது ஒரு பாடம்

மிக சுருக்கமாக மேலே சொல்லப்பட்ட இத்தனை நடைமுறைகளுக்கு பின்னால் ஏறக்குறைய 80 மணி நேர ஓய்வற்ற முயற்சியும், பல நூற்றுக் கணக்கானவர்களின் உழைப்பும் தங்கியிருக்கிறது.

இந்நிலையில் இந்த சிறுவன் மரணம் மக்களுக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறது என்பதும், இந்த பாடத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் இந்தச் சமூகம் எவ்வாறு செயற்படப் போகிறது என்பதும் நம்முன் வைக்கப்படும் மிக முக்கியமான கேள்விகளாக இருக்கின்றன.

ஆழ்துளை குழிக்குள் சிறுவர்கள் வீழ்ந்து மரணிப்பதும், காப்பாற்றப்படுவதும், சுஜித்தில் இருந்து ஆரம்பிக்கவில்லை. மாறாக நீண்ட காலமாக இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் நடைபெற்று வரும் நிலையில், சுஜித்தின் மரணம் அவை எல்லாவற்றுக்குமான ஒரு தீர்வாக அமைய வேண்டும்.

ஆனால் இந்த தீர்வுகளுக்கு எவ்வாறான நடைமுறைகளை நாம் கையாளப்போகிறோம், இந்த பொறுப்புகளை எல்லாம் யார் கையில் எடுக்கப்போகிறார்கள் எனும் போது தான், இச்சமூகத்தில் காலம் காலமாக புரையோடிப்போயிருக்கும் பண்புகள் வெளிப்படுகின்றன.

சிறுவன் சுஜித் ஆழ்துளை குழிக்குள் வீழ்ந்த பொழுதிலிருந்தே சமூக வலைத்தளங்களில் அரசை குற்றம் சாட்டுதல், சுஜித்தின் பெற்றோரை குற்றம் சாட்டுதல், துறை சார் நிபுணர்களின் செயற்பாடுகளை குறை சொல்லுதல் உட்பட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

எப்போதுமே யாரையாவது ஒருவரை குறை சொல்லுதல் இலகுவான விடயம்தான் என்றாலும், நம் கண்ணுக்கு முன்னால் நடைபெறுகின்ற ஒவ்வொரு அனர்த்தமும், எதிர்காலத்துக்கான ஒரு தீர்வை வலியுறுவதாக அமைகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள், நிபுணர்கள் முதல் அனைத்து தரப்பினரும் தத்தமது பணிகளை சரிவர செய்துள்ளனர் என்பது எதிர்க்கட்சிகள் கூட ஒத்துக்கொள்ளும் ஒரு விடயமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில், குறித்த மீட்புப்பணியில் எந்தவிதமான தொய்வும் இருக்கவில்லையா எனும் கேள்வி தவிர்க்க முடியாதது தான். ஆனால் மீட்புப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மீட்பதற்கு சாத்தியமான வழிகளை தேடுவதை தவிர்த்து குறைகளைச் சுட்டிக்காட்டுவது மனிதாபிமானத்தை கேள்விக்குட்படுத்தும் ஓர் செயலாக பார்க்கப்பட்டது. அதுதான் உண்மையும் கூட.

அந்தவகையில் சிறுவன் சுஜித்தின் மரணத்துக்கு பின்னர் எதிர்காலத்தில் இன்னொரு சுஜித் உருவாவதை தடுப்பதற்காக சுஜித்தை மீட்கும் பணிகள் எங்கெல்லாம் தடைப்பட்டன என சிந்திப்பது தவிர்க்கவியலாதது. ஆழ்துளை கிணறுகள் விவசாய நிலங்களில் அந்த நிலங்களின் உரிமையாளர்களால் தத்தமது வாழ்வாதார நோக்கத்தை அடிப்படையாக கொண்டு தோண்டப்படுகின்றன.

அவற்றின் பாவனை காலம் முடிந்த பின்னர் அல்லது அவற்றிலிருந்து நீரை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அவை மீண்டும் மூடப்பட வேண்டியமை குறித்த நில உரிமையாளர்களின் கடமையும் பொறுப்புமாக இருக்கின்ற அதே சந்தர்ப்பத்தில், இவ்வாறான குழிகள் மூடப்படுகின்றனவா என்பதை கிராம மட்ட, பிரதேச மட்ட ரீதியில் அவதானித்து அவற்றுக்கான தீர்வைப் பெறுவதிலும், கவனிக்கப்படாத குழிகளின் உரிமையாளர்களுக்கு தண்டனை அல்லது அபராதம் செலுத்தச் செய்வதிலும் அரசுக்கு மிக முக்கிய பொறுப்பு உண்டு என்பது மறுக்க முடியாதது.

அத்துடன் மாநிலத்தின் அவசர சேவை குழுக்களாக இருக்கக்கூடிய மீட்புக்குழு, தீயணைப்பு படை வீரர்களுக்குப் போதுமான இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கப்படாமை மிக பெரிய ஆள் பலத்தை கொண்டிருக்கும் இந்தியாவின் அதுவும் குறிப்பாக தமிழ்நாடு போன்ற மாநிலத்தில் இருக்கக்கூடிய மிக பெரிய குறைபாடாகும். நிலவியல் சார் தரவுகள் மற்றும் பயிற்சிகள், மீட்பு நடவடிக்கைகளுக்கு தேவையான, தகுந்த, நவீன உபகரணங்கள் உட்பட்ட அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுப்பதானது நம் சமூகத்தில் இன்னொரு சுஜித் உருவாகாமைக்கான மிக முக்கிய முன்னெடுப்பாக அமையும்.

ஓர் அவசர கால நிலையின் போது மாநில அரசால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் பலனளிக்காமல் போகும் எனத் தெரியும் சந்தர்ப்பத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை குழு அழைக்கப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் விரைவில் தேசிய பேரிடர் மேலாண்மை குழு சம்பவ இடத்தில் பிரசன்னமாகத் தவறியமை சிறுவன் சுஜித்தை நாம் இழக்க ஒரு காரணமாகி விட்டதோ என்பது எல்லோர் மனதிலும் இருக்கும் கேள்விகளில் ஒன்று. இந்தக் கேள்வி எழுவதை தவிர்க்க முடியாது. காரணம் சம்பவம் நடைபெற்றமைக்கும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழு சம்பவ இடத்திற்கு வருவதற்கும் இடையில் இருபது மணி நேரங்கள் பயணம் செய்துள்ளார்கள் என்பது அரசின் அலட்சியமே அன்றி வேறெதுவும் இல்லை.

சாலை வழியாக பயணித்தவர்கள் வாகன நெரிசலில் சிக்குண்டனர் எனப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், அவை சாமானியர்களை சமரசம் செய்யாமைக்கு முக்கிய காரணம், குறித்த விடயத்தின் விபரீதத்தை கருத்திற்கொண்டு தேசிய பேரிடர் மேலாண்மை குழுவினர் வான் வழியாக அனுப்பப்பட்டிருக்கலாம் என்பதை மக்கள் தெளிவாக அறிந்துள்ளமை தான்.

இத்தனை பெரிய இழப்பினை எதிர்கொண்டாலும், இத்தனை குறைகளை சுட்டிக்காட்டக்கூடியதாக இருந்தாலும், சம்பவத்தின் போது ஏறக்குறைய நான்கு நாள்களுக்கும் அதிகமாக களத்தில் இருந்தவர்களும், இரவு - பகல் பாராது சிறுவன் சுஜித் தொடர்பான கள நிலைவரங்களை உடனுக்குடன் நேரடியாக மக்களுக்கு கொண்டு சேர்த்த ஊடகங்களும், பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக சுஜித்தின் தாய் மற்றும் உறவினர்களுக்கு உளவியல் பலம் தந்த வர்களும், தமிழகம், இந்தியா மற்றும் நாடு கடந்து சிறுவன் சுஜித் மீண்டு வர வேண்டி தொடர்ச்சியான பிரார்த்தனைகளில் ஈடுபட்டவர்களும், இன்னும் நிதி மற்றும் பல்வேறு வகைகளில் உதவி செய்தவர்களும் நன்றிக்கு உரியவர்கள்.

சிறுவன் சுஜித்தின் மரணம் இந்த சமூகத்தின் அலட்சியங்களுக்கும், அறியாமைகளுக்கும் மேல் விழுந்த சவுக்கடியாகவும், எம் கண் முன்னே நடமாடும் கோடிக்கணக்கான சுஜித்களின் எதிர்காலம் குறித்து எமக்கு வழங்கிய பாடமாகவும் அமைய வேண்டும்.

ஒரு பெருங்கூட்டத்தை விழித்தெழ வைத்துவிட்டு உறங்கியிருக்கிறான் சுஜித். இனியாவது இந்த சமூகம் விழித்துக்கொள்ள வேண்டும். *

## பிஞ்சின் அழுகையே நெஞ்சலாம் ஒலிக்குது!

ஆழ்துளைக்குள் அழுகையொலி
அனைவரையும் உலுப்பியதே
வாழவெண்ணி வந்தவுயிர்
ஆழத்துள் அடங்கியதே
ஓலமிட்டு அழுதிட்டார்
ஓடியேடி அலைந்திட்டார்
நாளைவரும் எனநினைத்தார்
ஆழ்துளையோ அசரவில்லை !

தண்ணீரைத் தேடினார்
கண்ணீரே வந்தது
பிஞ்சுக் குழந்தையோ
பேதலித்து நின்றது
கெஞ்சினார் கிண்டினார்
கேட்கலையே இறைவனுக்கு
பிஞ்சுக் குழந்தையோ
பிணமாகிப் போனதே !

பெற்றாரின் தவறா
பேணி நிற்கும்
பேரரசின் தவறா
கற்றாரின் தவறா
கடவுளின் தவறா
யார்தவறே அறியோம்
பிஞ்சின் அழுகையே
நெஞ்செலாம் ஒலிக்குது !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா

# நாடு திரும்பினார் சந்திரிகா! அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஒக். 31

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனில் இருந்து கடந்த திங்கள் இரவு நாடு திரும்பியுள்ளமையை அடுத்து கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ள – குமார வெல்கம போன்ற – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளை நடத்தி வருகிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உருவாகியுள்ள சந்திரிகா – வெல்கம அணியின் சிறப்பு மாநாடு, எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில், எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பான முடிவு அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் இயக்கத்தின் உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டம் முடிவெடுத்திருந்த நிலையில், சந்திரிகா குமாரதுங்க லண்டனுக்குப்



பயணமாகியிருந்தார்.

நாடு திரும்பியுள்ள அவர், கோட்டாபய ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கான வியூகங்களை வகுத்து வரும் நிலையில், தயாசிறி ஜயசேகர போன்ற சுதந்திரக் கட்சித் தலைவர்கள் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வீசத் தொடங்கியுள்ளனர். (ஐ)

# புதிய கூட்டணியில் மைத்திரி - மஹிந்த இணைத் தலைமை



ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் இணைத் தலைவர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்படுவார்கள் எனச் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன மற்றும் பல கட்சிகள் இணைந்து கூட்டணியை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்படும். அதன்படி கூட்டணியின் தலைவராகப் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் தினேஷ் குணவர்தன நியமிக்கப்படுவார் எனச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கூட்டணியின் செயலாளர் மற்றும் பொருளாளர் பதவி பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களாலும், தேசிய அமைப்பாளர் மற்றும் உதவிச் செயலாளர் பதவிகள் சுதந்திர கட்சி உறுப்பினர்களாலும் நிரப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# அசாத் ஸாலியின் ஆதரவு சஜித்துக்கு

கொழும்பு, ஒக். 31

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அசாத் ஸாலி, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்கிறார் என அறிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தாம் முடிவு செய்துள்ளார் என அசாத் ஸாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் யாரை ஆதரிக்கவேண்டும் என்று தேசிய ஒற்றுமை முன்னணி விரிவாக ஆலோசனை நடத்தியது. கொலைகாரர்களையும் வெள்ளை வான் கலாசாரத்தைத் தொடங்கியவர்களையும் ஆதரிக்க முடியாது என்று நாங்கள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டோம்.

பள்ளிவாசல்களில் வாள்கள் இருப்பதாகவும் மதரஸாக்கள் சோதனை செய்யப்படும் என்று கூறும் – சிறுபான்மைச் சமூகங்கள் அழிக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து கூறும் – மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முடியாது. எனவே ஒருமனதாக சஜித் பிரேமதாஸவை



ஆதரிக்க முடிவு செய்தோம். ஐ.தே.க. தலைவரைச் சந்தித்து எங்கள் செய்தியை தெரிவித்தோம்.

எங்கள் ஆதரவாளர்கள் அனைவரும் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காகச் செயற்படுவார்கள் – என்றார். (ஐ)

# துறைமுக நகரக் காணி உறுதி சீன நிறுவனத்திடம் கையளிப்பு

கொழும்பு, ஒக். 31

கொழும்பு துறைமுக நகரத்தின் திருத்தப்பட்ட காணி உறுதிப் பத்திரம் நேற்று முன்தினம் சீன நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த நிகழ்வில் இந்தப் பத்திரம் சீன நிறுவன அதிகாரிகளிடம் சீனத் தூதுவர் செங் ஷியுவான் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

முதலில் இந்தக் காணி, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதையடுத்து, சீனாவின் சி.எச்.ஈ.சி. போர்ட் சிற்றி கொழும்பு நிறுவனத்துக்கு குத்தகை உடன்பாட்டின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிஹால் ரூபசிங்க முதலில் இந்த ஆவணத்தை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ரத்நாயக்கவிடம் கையளித்தார்.

அதையடுத்து, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் ரத்நாயக்க, குத்தகை உடன்பாட்டு ஆவணத்தை சி.எச்.ஈ.சி. போர்ட் சிற்றி கொழும்பு நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் ஜியாங் ஹோலியாங்கிடம் ஒப்படைத்தார். (ஐ)

# நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

நாட்டில் பெய்து வரும் அடை மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்த வான்கதவுகளில் இரண்டு 4 அடி அளவிலும் ஏனைய இரண்டும் 2 அடி அளவிலும் திறக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு வான் கதவுகளின் ஊடாக நிமிடம் ஒன்றுக்கு 3628 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டும் திறக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (ஐ)

# பெண் பொலிஸின் சங்கலி அறுப்பு வவுனியாவில் இரண்டு பேர் கைது!

வவுனியா – பூந்தோட்டம், அண்ணாநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலுக்குச் சென்ற பெண் பொலிஸ் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்த இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வவுனியா பூந்தோட்டம் அண்ணாநகர் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு வழிபடச் சென்ற பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

அவ்வழியாக வாகனம் ஒன்றில் வந்தவர்களிடம் சங்கிலி திருடப்பட்ட விடயத்தைத் தெரிவித்து தப்பிச் சென்ற இளைஞர்களின் அடையாளங்களையும் தெரிவித்தபோது – மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரின் தகவல்கள் தெரியும் என்று அவர்கள் பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து மகாறம்பைக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருடன் இணைந்து சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த திங்கள் மாலை இளைஞர் ஒருவரைக் கைது செய்து அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது மற்றைய இளைஞனையும் கைது செய்துள்ள பொலிஸார் இருவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் வவுனியாவில் அண்மையில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் தாங்கள் முற்படுத்தப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

# பாகிஸ்தான் மண்ணில் விளையாட இலங்கை அணி மீண்டும் தயார்



நீண்டதொரு சர்ச்சைக்கு பிறகு பாகிஸ்தானுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தொடரில் விளையாடுவதற்கு சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, மீண்டும் அங்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் வீரர்களுக்கு இடையே சுமூகமான பேச்சு ஒன்று இடம்பெற்றுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் மாத முற்பகுதியில் இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கிடையில் இந்த இரண்டு போட்டிகள் கொண்ட தொடருக்கான பரிந்துரையொன்றினையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் வழங்கியுள்ளது.

இதனை இலங்கை கிரிக்கெட் சபையும் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவதால், இத்தொடர் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக் குறித்து, அடுத்த வாரம் நிறை வேற்றுக் குழுக் கூட்டத்தில் உறுதிசெய்யப்படவுள்ளது.

இத்தொடர் உறுதி செய்யப்பட்டால், இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, டிசெம்பர் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறும்.

இரண்டாவது டெஸ்ட் போட்டி, டிசெம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கராச்சி மைதானத்தில் நடைபெறும்.

இந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக அமையவுள்ளது.

அண்மையில் ஒருநாள் மற்றும் ரி – 20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

இதில் முதலில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி, 2 – 0 என கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை இலங்கை அணி, முழுமையாகக் கைப்பற்றியது.

எனினும், இந்தச் சுற்றுப்பயணத்தின்போது சில சர்ச்சையான விடயங்களும் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக சுற்றுப்பயணத்தின்போது இலங்கை வீரர்களின் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக கருத்து நிலவியது. தற்போது இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது எனும் உறுதி மொழியையும் பாகிஸ்தான் வழங்கியுள்ளதாக தெரிகிறது. (ஐ)

## 20/20 உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றது நெதர்லாந்து

உலகக்கிண்ணத்திற்கான தகுதிச் சுற்றின் முதல் 'பிளே – ஓவ்' போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வீழ்த்தி ருவென்ரி 20 உலகக்கிண்ணத்திற்கு நெதர்லாந்து தகுதி பெற்றது.

ஐ.சி.சி. ருவென் ரி – 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை இடம்பெறுகிறது.

இந்தத் தொடருக்கான தகுதிச் சுற்று துபாய் மற்றும் அபுதாபியில் நடைபெற்று வருகிறது. இதில் 12 அணிகள் பங்கேற்றுள்ளன. 12 அணிகளும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள பப்புவா நியூ கினியா ஐந்து வெற்றிகள் மற்றும் ஒரு தோல்வியுடன் முதல் இடம்பிடித்தது. இதனால் உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது.

'பி' பிரிவில் அயர்லாந்து நான்கு வெற்றி, இரண்டு தோல்விகளுடன் ஓட்ட விகிதம் அடிப்படையில் முதல் இடத்தை பிடித்தது. இதன் மூலம் அயர்லாந்து அணியும் உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில் நேற்று முன் தினம் முதல் 'பிளே – ஓவ்' போட்டி ஒன்றில் நெதர்லாந்து – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி, 9 விக்கெட் இழப்பிற்கு 80 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 81 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து களம் இறங்கியது. அந்த அணி 15.1 ஓவரில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 81 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் நெதர்லாந்து அணி உலகக்கிண்ண தொடருக்கான முதல் சுற்றுக்குத் தகுதி பெற்றது.



## இந்தியாவில் பகலிரவு டெஸ்ட்டில் விளையாடவுள்ளது பங்களாதேஷ்

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவர் சௌரவ் கங்குலியின் கோரிக்கையை ஏற்றுப் பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் விளையாட பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ளது.

ரசிகர்களுக்கு டெஸ்ட் போட்டியின் மீதான ஆர்வம் குறைந்து வருவதை தடுக்கும் வகையில் ஆஸ்திரேலியா, பகல் – இரவு டெஸ்ட் போட்டியை நடத்த முடிவு செய்தது. அதன்படி நியூசிலாந்துக்கு எதிராக முதன்முறையாக பகல் – இரவு போட்டியை நடத்திக் காட்டியது.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியா சென்று விளையாடும்போது ஒரு போட்டியை பகல் – இரவு போட்டியாக நடத்த ஆஸ்திரேலியா விரும்பியது. ஆனால், இந்திய அணி பகல் – இரவு டெஸ்ட் போட்டிக்குத் தயராகவில்லை எனத் தெரிவித்து இந்தியக் கிரிக்கெட் சபை அவர்களது கோரிக்கையை நிராகரித்தது.

தற்போது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக பதவி ஏற்றுள்ள கங்குலி, இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லியுடன் பகல் – இரவு டெஸ்ட் குறித்து ஆலோசனை நடத்தினார். அப்போது பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் விளையாட விராட் கோஹ்லி சம்மதம் தெரிவித்தார் எனக் கங்குலி கூறியிருந்தார்.

இதனால் உடனடியாக பங்களாதேஷிற்கு எதிராக கொல்கத்தா ஈடன் கார்டனில் நடைபெற இருக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியை பகல் – இரவு டெஸ்டாக நடத்த இருக்கிறோம். நீங்கள் இந்த டெஸ்டில் விளையாட வேண்டும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதியிருந்தார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இதற்கு சம்மதம் தெரிவிக்கும் என கங்குலி நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் வீரர்கள் மற்றும் அணி நிர்வாகத்துடன் ஆலோசனை நடத்திய பின்னர் முடிவை அறிவிக்கிறோம் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் விளையாட பங்களாதேஷ் சம்மதம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் இந்திய டெஸ்ட் அணி முதன்முறையாக பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை பகல் – இரவு டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அணியாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்திய தீவுகள் மற்றும் சிம்பாவே அணிகள் விளங்குகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் இடையே நடக்கும் போட்டிதான் ஜனாதிபதித் தேர்தல்!

## வவுனியாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

வவுனியா, ஒக். 31

இந்த ஜனாதிபதி தேர்தலானது நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடக்கின்ற பாரிய போட்டியாகும். வெறுமனே தேசியவாதத்தையும் தேசப்பற்றையும் தங்களின் அயோக்கியத்தனத்துக்கு அடைக்கலமாக பயன்படுத்துகின்ற கும்பலுக்கு எதிராக மக்கள் தங்களது வாக்குப்பலத்தைப் பிரயோகிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த அரசில் பெருந்தொகையானோர் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டனர். இவர்களைக் கண்டுபிடிப்பதற்கு எவ்விதமான பொறிமுறைகளும் இல்லாமல் அவர்களின் அப்பாவி உறவினர் செய்வதறியாது தவித்தனர். தற்போதைய அரசின் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனத்தின் உத்தரவின் பிரகாரம் காணாமல்போனோரை கண்டறியும் ஆணைக்குழுவொன்றை அமைத்துள்ளோம்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழுவில் பதிவுசெய்ய முடியும். இதன்மூலம், காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறியும் விதத்தில், அவர்களது குடும்பத்தினரின் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகள் வழங்கப்படும். அத்துடன் இழப்பீடுகளை வழங்கவும் அவர்களின் குடும்பத்துக்கு மறுவாழ்வாழ்வு அளிக்கவும் இதன்மூலம் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கடந்த அரசில் மேற்கொள்ளப்பட்ட அநியாயங்களை மீளமைப்பதற்காக தற்போதைய அரசு இந்த ஆணைக்குழுவை நியமித்துள்ளது. அதுமட்டுமன்றி, தனிப்பட்ட வன்மங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கல், அட்டூழியங்கள், அட்டகாசங்கள் இனியும் தொடராமல் தடுப்பதற்கான உத்தரவாதங்களை தற்போதைய அரசாங்கத்தினால் சட்டமூலமாக அமுல்படுத்தியுள்ளோம்.

நாட்டின் இளம் சந்ததியினருக்கு புதிய உற்சாகத்தையும், உற்வேகத்தையும் உருவாக்குகின்ற இளம் தலைவராக நாங்கள் சஜித் பிரேமதாஸவைக் களமிறக்கியுள்ளோம். இதனால் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் மட்டுமல்ல, சகவாழ்வை விரும்பும் அனைத்துசமூகங்களைச்சேர்ந்தவர்களும் அவருக்கு பலத்த ஆதரவை வழங்கி வருகின்றனர். இதைவிட பெரியதொரு ஆறுதலை மக்கள் அடையப் போவதில்லை.

வெளிநாட்டுச் சக்திகளுக்கு சோரம்போகாத இலங்கையை உருவாக்கி புதிய யுகமாற்றத்தை உருவாக்குவதற்கு நாங்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். வெறுமனே தேசியவாதத்தையும் தேசப்பற்றையும் தங்களின் அயோக்கியத்தனத்துக்கு அடைக்கலமாக பயன்படுத்துகின்ற கும்பலுக்கு எதிராக, நேர்மையான, சகல இனங்களுக்கும்நிம்மதியானவாழ்வைதரக்கூடிய தலைவராக சஜித் பிரேமதாஸவை அடையாளம் கண்டிருக்கிறோம்.

இந்த ஜனாதிபதித் தேர்தலானது நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடக்கும் போட்டியாகும். சிறுபான்மை மக்களைத் துச்சமாக மதித்து, யுத்தம் என்ற போர்வைக்குள் அவர்கள் ஏற்படுத்திய கெடுபிடிகள் யுத்த முடிவின் பின்னரும் தீர்ந்தபாடில்லை. தொடர்ச்சியான பாய்ச்சல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் கும்பலுக்கு நாட்டின் ஆட்சியை ஒப்படைக்க முடியாது.

சிறுபான்மைத் தலைமைகளை ஒருமித்து உருவாக்கியுள்ள சஜித் பிரேமதாஸ மீது நீங்கள் வைக்கும் நம்பிக்கை, உங்களிடமிருந்து வருகின்ற உற்சாகத்தின் மூலம் வெளிப்படுகின்றது. இந்த தேர்தல் உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகக் கருதி, ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

அடிக்கடி வரட்சியினால் பாதிக்கப்படும் வன்னி மாவட்டத்துக்கு, நான் அமைச்சை பொறுப்பேற்றதிலிருந்து பல குடிதண்ணீர்த் திட்டங்களை அறிமுகப்படுத்தினோம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின்மூலம் பேராறில் பாரிய நீர்த்தேக்கத்தை உருவாக்கி, அதிலிருந்து வவுனியா உட்பட சுற்றுப்புறத்திலுள்ள பல நகரங்களுக்கும் நீரை பகிர்ந்தளிக்கின்ற முயற்சியில் நாங்கள்வெற்றி கண்டுள்ளோம்.

அது மட்டுமன்றி, நீரை கொண்டுசெல்ல முடியாத பிரேதசங்கள் அனைத்துக்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கியுள்ளோம். மல்வத்து ஓயாவில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைத்து, அப்பிரதேசத்தில் நீர்ப்பாசனம் வழங்குவதுடன், வன்னியில் நீர் வழங்கல் திட்டத்தை நிறைவுசெய்யும் கட்டத்தில் இருக்கின்றோம். அதேபோல் பாகற்குளத்தை அண்டிய சகல பிரதேசங்களுக்கும் நீரை கொண்டு செல்லக்கூடிய திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

வரட்சியினால் பாதிப்படைகின்ற பல இடங்களுக்கு பாரிய நிதியொதுக்கீடுகளை மேற்கொண்டு, நீர் வழங்கல் திட்டங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் செய்து கொடுத்துள்ளோம். கல்வித் துறையிலும் இந்த அரசாங்கம் பாரிய யுகமாற்ற புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. எந்த அரசாங்கத்திலும் இல்லாதவாறு இந்த அரசாங்கத்தின் மூலம் அபிவிருத்திகளுக்கு பாரிய நிதியொதுக்கீடுகளை செய்திருக்கிறோம் – என்றார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான மனோ கணேசன், றிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ், வவுனியா நகர சபை உறுப்பினர் முனவ்வர், வெண்கல செட்டிக்குளம் பிரதேச சபை உறுப்பினர் மாஹிர் மற்றும் கட்சியின் வன்னி மாவட்ட ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## பொலிஸாரின் துப்பாக்கியைக் காணவில்லை!

கொழும்பு, ஒக். 31

பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் இருந்த உத்தியோகப்பூர்வ துப்பாக்கி காணாமற்போயுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மஹாஓயா பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்டு கடமையாற்றிய போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரி ஒருவரின் உத்தியோகப்பூர்வ துப்பாக்கியே கடந்த 27 ஆம் திகதி காணாமல் போயுள்ளது.

துப்பாக்கியுடன் அதில் காணப்பட்ட எட்டு ரவைகளும் காணாமல் போயுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மஹாஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தமிழுக்குத் தடை விதித்த உணவகம் மீது நடவடிக்கை




கொழும்பு, ஒக். 31

தமிழ் மொழியில் பேசக்கூடாது எனத் தனது ஊழியர்களுக்கு உத்தரவிட்ட கொழும்பு உணவகத்துக்குஎதிராகஉடனடியாகவிசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து பதிவொன்றை இட்டுள்ளார்.

அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள சமத்துவத்திற்கான உரிமையை மீறுவோர் குறித்து சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச கரும மொழிகள் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கொழும்பு 7 ஹொறட்டன் பிளேஸ் பகுதியிலுள்ள பெப்பமின்ற் கபே என்ற பிரபல உணவகத்தில் ஊழியர்கள் தமிழ் மொழியில் உரையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த உணவகத்தில் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் மாத்திரமே உரையாடவேண்டும் என அறிவிப்புப் பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஜனாதிபதித் தேர்தல் 2019

தபால் மூல வாக்காளர்களுக்குப் பணிவான வேண்டுகோள்

அன்பான சகோதர சகோதரிகளே வணக்கம்!

ஒரு தமிழர் இலங்கையின் ஜனாதிபதியாக வருவதைக் கனவிலும் காணமுடியாது. நீங்கள் கேட்கலாம் – அவ்வாறாயின் நீர், ஏன் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றீர்? எனக் கேட்கலாம்.

தமிழர் தாயகத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரமுகர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் அந்த முயற்சி இறுதி நேரத்தில் தோல்வியடையும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறானதொரு சூழலில் அந்த முயற்சி தோல்வியடைந்து விடக்கூடாது. அவர்களின் உழைப்பு வீணாகிவிடக் கூடாது என்பதற்காக நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

பிரதான சிங்கள வேட்பாளர்கள் எவருமே தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் எதனையுமே ஏற்றுக்கொள்ளாத நிலையில், தமிழ் மக்களாகிய நீங்கள் தென்னிலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் ஒரு தெளிவான செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. அதற்கான ஒரு வரலாற்று வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனை நீங்கள் தவறவிடமாட்டீர்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். என்னை மறந்துவிடுங்கள். நான் உங்கள் முன்னால் ஒரு வெறும் குறியீடு மட்டுமே. தமிழ்த் தேசியத்தை மட்டும் மனதில் நிறுத்தி வாக்களியுங்கள். **மீன் சின்னத்திற்கு** நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் தமிழ்த் தேசியத்தை காப்பாற்றுவதற்கான உங்கள் திடசித்தமாகும். நாம் எமது வாக்குகளால் சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எமது நிலைப்பாட்டைச் சொல்லுவோம். எங்களுடைய உரிமைகளை ஏற்றுக்கொள்ளாத உங்களுக்கு எங்களுடைய வாக்குகளைத் தரமாட்டோம் என்பதை உரத்துச் சொல்வோம். சிங்கள தேசத்தின் தேர்தலை தமிழர் தேசத் திற்கான தேர்தலாக மாற்றுவோம்.

எம்.கே. சிவாஜிலிங்கம்



தமிழ்ப் பொது வேட்பாளர்

விளம்பர அனுசரணை : புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள்

வடமாகாண

# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**




## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**TAMIL NATIONAL GREEN ORGANIZATION**

# அரசு தீர்வு தரும்வரை போராட்டம் தொடரும்

## காணாமற்போனோரின் உறவுகள் அறிவிப்பு



கிளிநொச்சி, ஒக். 31
இலங்கை அரசு தமக்கான தீர்வினை வழங்கும் வரையில் போராட்டம் தொடருமென வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

983ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்றுக் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சுமார் 1 மணிநேரம் ஏ - 9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்', '6000 ரூபா வேண்டாம்' உள்ளிட்ட பல்வேறு கோசங்களைக் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் எழுப்பியமையுடன், தமது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டமை குறித்து உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

(ஐ)

# கல்முனை வடக்கை தரமுயர்த்துவோம்!

## கிழக்கில் மஹிந்த சூளுரை



மட்டக்களப்பு, ஒக். 31
ஆட்சிக்கு வந்ததும் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவோம் என நாங்கள் உறுதிமொழி வழங்குகிறோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை, காணிகளுக்கு உரிமம் இல்லாது விவசாயம் மேற்கொண்டுவரும் விவசாயிகளுக்குக் காணி உரிமத்தை பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் மட்டக்களப்பு கல்லடியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, உங்களுக்கு இருக்கும் நாளாந்தப் பிரச்சினைகளுக்காக போராட்டங்கள் நடத்துகிறீர்கள். உங்கள் பொருளாதாரப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்தையும் நாங்கள் அறிவோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் கல்முனை வடக்குப் பிரதேச பிரதேச செயலகத்தைத் தரமுயர்துவதாக நாங்கள் உறுதிமொழி வழங்குகின்றோம்.

அதுமட்டுமல்ல, காணிகளுக்கு உரித்தான உரிமம் இல்லாமல் விவசாயம் மேற்கொண்டுவரும் விவசாயிகளுக்குக் காணி உரிமத்தைப் பெற்றுத்தருவோம்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே இந்த மாகாணத்தில் அபிவிருத்தியைச் செய்தோம். கல்லடிப் பாலம், மண்முனை பாலம் எனப் பல அபிவிருத்திகளைச் செய்தோம்.

மட்டக்களப்பு மக்கள் இந்தத் தேசத்தில் தலைநிமிர்ந்து நிம்மதியாக வாழவேண்டும். அதை நாம் செய்வோம் - என்றார்.

(ஐ)

# காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

காணாமற்போனவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள மரணச் சான்றிதழை இரத்துச் செய்து அவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் தலா 6000 ரூபா வீதம் இடைக்கால நிவாரண கொடுப்பனவை வழங்குதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காணாமற்போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் நிதி அமைச்சர் மற்றும் தேசிய ஒருமைப்பாடு அரச மொழி சமூக நல்லிணக்கம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் மரணச் சான்றிதழை இரத்துச் செய்து வழங்கப்படும் 'காண முடியாமைக்கான சான்றிதழ்'க்கான செல்லுபடியான கால எல்லை, 2 வருடம் மாத்திரம் என்பதினால், சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ள காணாமற்போனோரின் குடும்ப உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலையில் 2010 ஆம் ஆண்டின் இல. 19 கீழான இறப்புப் பதிவை மேற்கொள்ளல் சட்டத்தின் 2ஆவது சரத்தின் கீழ், சம்பந்தப்பட்ட மரண சான்றிதழ் வழங்கப்பட்டிருக்குமாயின் காணமுடியாமைக்கான சான்றிதழைப் பெற்ற அனைத்து குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.(ஐ)

# மகேஷ் சேனநாயக்க நேற்று யாழ். வந்தார்







*யாழ்ப்பாணம், ஒக். 31*
*ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.*

*இதன்போது அவர் யாழ். ரயில் நிலையத்தில் பொன்னாடை போர்த்தி மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டார்.*

*இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அவர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களில் ஒருவராகக் களம் இறங்கியுள்ளார்.*

*கொழும்பில் இருந்து ரயிலில் யாழ். வந்த மகேஷ் சேனநாயக்க தனது தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுத்துள்ளார்.*

*குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சென்று பல தரப்பினர்களையும் அவர் சந்திக்கவுள்ளார் எனக் கூறப்பட்டது.* *(ஐ - 07)*

# மகேஷ் சேனநாயக்கவுக்கு பொன்னாடை போர்த்தினார் கூட்டமைப்பு உறுப்பினர்!



யாழ்ப்பாணம், ஒக். 31
ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினண்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் நா.தனேந்திரன் ஆதரவு வழங்கியுள்ளார்.

தேசிய மக்கள் இயக்கம் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க நேற்று யாழ். வந்தார்.

கொழும்பில் இருந்து ரயிலில் யாழ்ப்பாணம் வந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோ கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் நா.தனேந்திரன் முன்னாள் இராணுவ தளபதிக்குப் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். (ஐ - 07)

# பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்

*கொழும்பு, ஒக். 31*
*வாக்களிப்பதைத் தவிர வேறு எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபட எந்தவொரு பாதுகாப்பு உறுப்பினருக்கோ அல்லது பொலிஸ் அதிகாரிக்கோ உரிமை இல்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.* *(ஐ)*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2019 இல் வெளியிடப்பெற்றது.